3—

சங்கராபாளையம் ஊராட்சியில் பட்டா வழங்குதல்

***23241–திரு. வே. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, சங்கராபாளையம் ஊராட்சி, குருநாதபுரம் என்ற மந்தைப் புறம்போக்கிற்குப் பட்டா வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கராபாளையம் கிராமத்தில் மந்தைவெளிப் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக மேற்படி மந்தைவெளிப் புறம்போக்கு நிலத்தினை நத்தமாக வகைமாற்றம் செய்து அரசு ஆணை நிலை எண் 579, வருவாய்த்துறை, நாள் 19-9-1994-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தியூர் தொகுதி, பவானி வட்டம், சங்கராபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த குருநாதபுரம் என்று சொல்லக் கூடிய அந்த இடம் மந்தைவெளியாக இருந்த காரணத்தினால் நில மாற்றம் செய்து கிளாசிபிகேஷன் செய்து கொடுத்து பட்டா வழங்குவதற்கு ஆவன செய்து இருக்கிறார்கள். இதே போன்று என்னுடைய தொகுதியில் கடந்த பல ஆண்டுகளாக பட்டா வழங்கப்படாமல் இருந்ததற்கெல்லாம் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கருணையாலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியினாலும் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.